# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

( Prosecution P.W.11
Deposition of witness for (Defence
(Court

Evidence recorded in through Video Conference. The Witness deposed from Principal District Court Campus, Chengalpattu The Co-ordinator is S.Devi, Assistant Programmer.

| | | | |
|---|---|---|---|
| Name | மதிபா | -- | |
| Father's Name | சதாசிவம் | Calling | மருத்துவர் |
| Village | செங்கல்பட்டு | Religion | |
| Taluk | செங்கல்பட்டு | Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of November 2025.

**Accused absent. Petition filed.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேரராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 14.06.2018ம் தேதி மதுரை அரசு மருத்துவக்கல்லூரியில் அதே துறையில் பணியில் இருந்தபோது திருவில்லிபுத்தூர் வட்டக் காவல் ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்க மம்சாபுரம் காவல் நிலைய குற்ற எண்.105/2018 வழக்கில் இறந்தபோன கல்யாணகுமார், (வயது 20) என்பவரின் பிரேதத்தை தலைமைக்காவலர் 723 மாரிமுத்துராஜா என்பவர் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை மதியம் 01.10மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. பிரேதமானது நடுத்தர ஊட்டத்துடன் கை, கால் விரல் நகங்கள் ஊதா நிறத்துடனும், பிண விறைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. மார்பின் இரண்டு பக்கத்திலும் 2X1cm அளவிலான வடிகால் காயம் காணப்பட்டது. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் கீழ்க்கண்டவாறு காணப்பட்டது.

1. 18X1cm குழி ஆழம் வரை தையலிடப்பட்ட காயம் வயிற்றின் முன் பக்க நடுப்பகுதியில் காணப்பட்டது. அதனை கூராய்வு செய்து பார்த்தபோது வயிற்றிலுள்ள உறை சிவந்த நிறத்திலும், அதன் மேல்பக்கம் முழுவதும் சீழ்பிடித்தும் காணப்பட்டது. வயிற்றுப் பகுதியில் சுமார் 100மி.லி சீழ்பிடித்த திரவமும் இரத்தத்துடன் காணப்பட்டது. 3X2cm மற்றும் 2cmX1cm அளவிலான கன்றிய காயங்கள் பெருங்குடலில் காணப்பட்டது. 2X1cm

அளவிலான கன்றியகாயம் சிறுநீர்ப்பையில் மேல்புறத்தில் காணப்பட்டது.

2. இடுப்பு பகுதி முழுவதும் இரண்டு பக்கத்திலும் முழுவதுமாக உருமாறி காணப்பட்டது. அதனை கூராய்வு செய்து பார்க்கும்போது இடுப்பு எலும்பு இரண்டு பக்கத்திலும் உடைந்தும், அதன் அடியில் உள்ள தசைகள், நரம்புகள், இரத்த நாளங்களிலும் கன்றிய காயம் காணப்பட்டது.

3. 4X2 செ.மீ X தசை ஆழம் வரை தையலிடப்பட்ட சிதைந்த காயம் நெற்றியின் நடுப்பகுதியில் காணப்பட்டது.

4. 2X1cm அளவிலான தையலிடப்பட்ட சிதைந்த காயம் மூக்கின் மீது காணப்பட்டது.

5. 6X2cmX தசை ஆழம் வரையிலான சிதைந்த காயம் வலது தொடையின் உள் பகுதியில் காணப்பட்டது.

6. 5X3cm அளவிலான பாதி ஆறிய நிலையில் உள்ள சிராய்ப்புக் காயம் இடது முழங்காலின் முன் பகுதியில் காணப்பட்டது.

7. 12X8cm அளவிலான பாதி ஆறிய நிலையில் உள்ள சிராய்ப்புக் காயம் இடது காலின் நடுப்பகுதியில் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

8. 2X1cm அளவிலான பாதி ஆறிய நிலையில் உள்ள சிராய்ப்புக் காயம் வலது கால் பாதத்தில் முன் பகுதியில் காணப்பட்டது.

9. 2X1cm அளவிலான பாதி ஆறிய நிலையில் உள்ள சிராய்ப்புக் காயம் வலது முழங்காலில் முன் பக்கத்தில் காணப்பட்டது.

10. 0.5x0.5cm முதல் 0.25X0.25 செ.மீ வரை பாதி ஆறிய நிலையில் உள்ள சிராய்ப்பு காயங்கள் வலது கையின் மேற்பகுதியில் காணப்பட்டது.

மூளையை கூராய்வு செய்து பார்க்கும்போது தலைத்தோலுக்கு அருகில் 10X6cm அளவிலான கன்றிய காயம் தலையின் முன் உச்சிப்பகுதியில் காணப்பட்டது. சிறுமூளையின் மேற்பரப்பு முழுவதும் பரந்த இரத்தச் செறிவுடன் காணப்பட்டது.

**பிறபகுதி விபரங்கள்**

மார்பு பகுதி காலியாகவும், இதயம் மேல் அறையில் 15 மி.லி வைக்கோல் நிற திரவமும் இதயத்தின் வலது பக்கத்தில் இரத்தக்கட்டிகளுடனும், இதயத்தின் இடது பகுதி காலியாகவும், இதயத் தமனிகள் சீராகவும், நுரையீரல் அதன் வெட்டுத்தோற்றத்தில் இரத்தச் செறிவுடனும், மூச்சுக் குழாய் மற்றும் நாவடி எலும்பு சீராகவும், உணவுப் பையில் சுமார் 150 மி.லி பழுப்பு நிற திரவமும் எவ்வித நெடியுமின்றி கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் அதன் வெட்டுத்தோற்றத்தில் இரத்தச் செறிவுடனும், சிறுகுடலில் 20 மி.லி அளவுள்ள பித்தம் தோய்ந்த திரவமும் எவ்வித நெடியுமின்றி, சிறுநீர்ப்பை காலியாகவும் காணப்பட்டது.

எனவே, இறந்த நபர் அவருக்கு ஏற்பட்டிருந்த பலதரப்பட்ட காயங்களினால் இறந்திருக்கலாம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றிதழ் **அ.சா.ஆ.10** ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

அவருக்கு முன்பக்கத்தில் தான் அதிகமான காயங்கள் இருந்தது. அவர் மது அருந்தியிருந்தாரா என்று பிரேத பரிசோதனையில் தெரிந்ததா என்றால் மது வாடை எதுவும் இல்லை. அவரது வயிற்றுப்பகுதியில் இருந்த 150 மி.லி பழுப்பு நிற திரவம் ஆல்கஹாலாக இருக்கலாம் என்றால் அவ்வாறு இருக்க வாய்ப்பில்லை. இறந்துபோன நபருக்கு ஏற்பட்ட காயங்கள் தாமாக கீழே விழுந்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் அது சிகிச்சை அளித்த மருத்துவரைத்தான் கேட்கவேண்டும், என்னிடம் பிரேத பரிசோதனைக்கு வரும்போது தையல் போடப்பட்டிருந்தது.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**